This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# கடவுள் வந்திருந்தார்

## *காட்சி : 1*

**தி**ரை விலகும்போது மேலிருந்து ஒரு நீல ஸ்பாட் விளக்கு மட்டும், நடுவே நின்று கொண்டிருக்கும் சீனிவாசன் மேல் விழுகிறது. பின்னணியில் இருட்டு. சீனிவாசன் (சபையினரைப் பார்த்து நிற்கிறார். கையில் ஒரு கோட்டு, காலர் இல்லாத சட்டை, இடுப்பிலே பெல்ட் வேஷ்டி, வயது 55) நமஸ்காரம். எல்லாரும் வந்தாச்சுன்னு நினைக்கிறேன். ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே சில அறிமுக வார்த்தைகள். என்பேர் எஸ்.எஸ்.சீனிவாசன். சமீபத்தில் எனக்கு சில வினோதமான விஷயங்கள் எல்லாம் நடந்தது. சில விசித்திரமான விஷயங்களைப் பார்தேன். பார்த்ததைப் பார்த்தபடி சொன்னது தப்பாப்போய் எக்கச்சக்கமாய் போய்டுத்து. உண்மை என்கிறது என்ன? ஆதிசங்கரர் ஒரு கேள்வி கேட்டார். "பாக்கறதுக்கு ஒருத்தருமே இல்லையா ஆகாசம் அப்பவும் நீலமா இருக்குமாடான்னுட்டு. ஏன்? ஒரு ஆள் பாத்தாக்கூடப் போறாது. ரெண்டுபேர் பார்த்து ஒத்துப் போனாத்தான். உண்மைக்கே ஒருவடிவம் வரதுன்னு நினைக்கிறேன். புரியாமப் பேசறேன் இல்லே? நீங்க பாருங்க. பார்த்ததும் புரியும். முதல்லே இருந்து சொல்றேன். அன்னிக்கு சனிக்கிழமைன்னு நினைக்கிறேன். பின்னணியில் மெலிதாக சுப்ரபாதம் ஒலிக்கிறது) ஆபீசுக்கு கிளம்பிண்டிருந்தேன். நான் ஒரு சாதாரண ஆசாமி. சாதாரணக் குடும்பம். மனைவி, மகள்... சாதாரண நாள். ஆனா அன்னிக்கு நடந்தது என்னவோ சாதாரணமானதில்லை. ரொம்ப strange! (கோட்டு அணிந்து கொள்கிறார். மேடை முழு ஒளிபெறுகிறது.

**காலை :**

மத்தியதரக் குடும்ப அறை. நடுவே நீண்ட பெஞ்சு. ஓரத்தில் ஒரு தையல் மிஷின். அதன் அருகே ஒரு படிக்கும் மேஜை. அதன்மேல் ஒரு மேஜை விளக்கு. மாடிக்கும் செல்லும்படி வலதுபக்கம். மாடி அறை வாசல் தெரிகிறது. சுவற்றில் சுவாமி படங்கள். ரவிவர்மா படங்கள். தாத்தா கடிகாரம் நின்றிருக்கிறது. இடதுபுறத்தில் சமையல் அறை, சற்றுத் தள்ளி இடது மேல் மூலையில் ஒரு அறையின் ஜன்னல் தெரிகிறது. சுவற்றில் ஸ்டாண்ட் மாட்டிப் பொறுத்தப்பட்ட பழைய வால்வு ரேடியோ. நடுவில் வீட்டு வாசலில் கண்ணாடி மணித்திரை. பிரவேசங்கள் எல்லாம் நடுவிலிருந்து சௌகரிகப்படி வைத்துக் கொள்ளலாம். ஜன்னல் திரைகளாக பழைய வாயில் புடவைகள் தொங்குகின்றன. ஓரத்தில் பானையில் தண்ணீர் வைத்திருக்கிறது. நடுப்புற வாசலில் பின்னணியில் Cyclorama effect கடைசியில் தேவைப்படும். நாடக இறுதியில் அந்தப் பின்னணியில் ஒரு கோயிலின் ஸில்ஹௌட் (silhovette) தெரியவேண்டும்.

(சீனிவாசன் ஆபீஸ் கிளம்பத் தயாராகிறார். செய்தித்தாளை மேய்ந்துவிட்டு சுவாமி படத்திலிருந்து விபூதி எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டு – பின்னணியில் ஒலித்த